லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும் உபாய ஆய்வுகளுக்குமான நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை -2024

லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும், உபாய ஆய்வுகளுக்குமான நிறுவகத்தின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 **நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கும் தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு செய்யப்படுகின்ற ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய முறைப்படி பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படுகின்ற் நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

1.3 **நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டியின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.4 **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலைமை**

நிறுவனத்தால் இறுதியாக தயாரித்த 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்களின் விடயம்	பெறுமதி ரூபா
<u>சொத்துக்கள்</u>	
நடைமுறையல்லா சொத்துக்கள்	163,361.209
நடைமுறைச் சொத்துக்கள்	4,299,622
மொத்த சொத்துக்கள்	**167,660,831**
<u>உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்</u>	
உரிமை மூலதனம்	165,680,033
பொறுப்புக்கள்	1,980,798
மொத்த பொறுப்புக்கள்	**167,660,831**
மொத்த வருமானம்	47,564,977
மொத்த செலவினம்	44,664,904
மிகை	**2,900,073**

2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு		இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) 2006 இன் 32 ஆம் இலக்க உபாயவழி ஆய்வு தொடர்பான இலங்கை நிறுவன (திருத்திய) சட்டம்				
(i)	10(அ) ஆம் பிரிவு	நிறுவனத்தின் முகாமைத்துவ சபையினால் ஐந்து நபர்களை உள்ளடக்கிய சர்வதேச ஆலோசனை குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும அவ்வாறான ஆலோசனைக் குழு	05 துறைகளை உள்ளடக்கும் வகையில் 05 நபர்களைக் கொண்ட சர்வதேச ஆலோசனைக் குழுவினை நியமிப்பதற்காக 2023 நவம்பர் 17 ஆந் திகதி பணிப்பாளர் சபைக்	சட்டத்தின் பிரகாரம் சர்வதேச ஆலோசனைக் குழு நிமிக்கப்படல் வேண்டும்.

		ஒன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	கூட்டபத்திரம் முகாமைத்துவ கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது	
(ii)	10உ(1) ஆம் மற்றும் உ(2) ஆம் பிரிவுகள்	சட்டத்தை அமுல்ப்படுத்துகின்ற 2006 செப்தெம்பர் 29 ஆம் திகதி முதல் பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவனத்தை இந்த நிறுவனத்திற்கு கையளிக்க வேண்டியிருந்ததுடன் அந்த நிறுவனத்தின் பிரிவு ஒன்றாக பயிற்சி நிகழ்சித்திட்டம் மற்றும் ஏனைய கற்கை பாடநெறிகள் நடாத்தப்படல் வேண்டும். மேலும் அதன் சேவையில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களாக கருதப்படல் வேண்டும். எனினும் நிறுவனம் மற்றும் ஊழியர்கள் பொறுப்பேற்க்கப்பட்டிருக்கவில்லை.	பண்டாரநாயக்கா சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவனத்தை கல்வி நிறுவனத்தின் ஒரு பிரிவாக பொறுப்பேற்பது கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாதிந்தமைக்கு காரணமாக இருந்ததானது நிறுவனத்திற்கு 2006 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை அரசாங்கத்திடமிருந்து எந்தவொரு நிதி ஏற்பாடும் பெற்றுக்கொள்ளப்படாமையாகும். நிறுவனத்தின் வாடகை கொடுப்பனவிற்காக நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்வதற்கு வெளி விவகார அமைச்சு கொள்கை ரீதியான தீர்மானம் எடுத்து 2023 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்திலிருந்து வாடகை கொடுப்பனவிற்காக நிதி ஏற்பாடு வழங்கப்படுகின்றது.	சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பயிற்சி நிறுவனம் மற்றும் அதன் பதவியணியினரை இந்த நிறுவனத்திற்கு பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	10உ(2) (i) ஆம் பிரிவு	அதிகாரச் சட்டத்தினை அமுல்ப்படுத்துகின்ற திகதிக்கு முன்னர் பண்டாரநாயக்க தூதுவர் பயிற்சி நிறுவனத்தினால் பேணப்பட்டு வந்த குறித்த சில கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்த அனைத்து பணமும் நிறுவனத்தின் நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.	பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவனத்தினால் பேணப்பட்டு வருகின்ற கணக்குகளிலுள்ள பணம் நிறுவனத்தின் சொந்த முயற்சியினால் உழைக்கப்பட்ட பணம் என்பதனாலும் ஊழியர் சம்பளம், மூலதனச் செலவுகள் மற்றும் ஏனைய மீண்டுவரும் செலவுகளை கொடுப்பனவு செய்வதற்கு அரசாங்கத்திடமிருந்து	சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பயிற்சி நிறுவனம் மற்றும் அதன் பதவியணியினரை இந்த நிறுவனத்திற்கு பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

				நிதி ஏற்பாடு கிடைக்காமையாலும் அப்பணத்தை கணக்குகளுக்கு செலவு வைப்பதற்கான இயலுமை இருக்கவில்லை.	
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை	.			
	(i)	நிதிப்பிரமாணம் 395(ஊ)	பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவனத்தின் வங்கி கணக்கிணக்க கூற்றுக்களைத் தயாரித்தல் சேகரிக்கப்படுகின்ற பணத்தை வங்கியில் வைப்புச் செய்தல் காசோலைகள் எழுதுதல் காசேட்டினைப் பேணுதல் ஆகிய அனைத்து செயற்பாடு:களும் ஒரு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டது.	இந்த நிறுவனத்தில் இடம்பெறுகின்ற அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு மூன்று உத்தியோகத்தர்களே உள்ளதனால் அவ்வாறு செயற்பாடுகளை பகிர்ந்தளிப்பது நடைமுறையில் ஒரு சிக்கலான செயற்பாடாக உள்ளது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பாடுகளை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
	(ii)	நிதிப்பிரமாணம் 756(6)	ஒவ்வொரு ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் பொருள் மீளாய்வு அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	வெளிவிவகார அமைச்சின் உத்தியோகத்தர்களாலேயே பொருள் மீளாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் பொருள் மீளாய்வினை துரிதமாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொருள் மீளாய்வினை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
(இ)	2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க அரசாங்கமுகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையி	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் இன்றி நிறுவனங்களுக்கு ஆளணியினரைச் சேர்த்துக்கொள்ளுதல் மற்றும் செலுத்தப்படுகின்ற	பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வெளி விவகார அமைச்சிலிருந்து இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் அடிப்படைச்	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் இன்றி படிகள் செலுத்தாதிருத்தல் வேண்டும்.	

	ன் (II) ஆம் பந்தி		சம்பளங்களையும் படிகளையும் தீர்மானத்தல் தவிர்க்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக வெளிவிவகார அமைச்சிடமிருந்து லக்ஸ்மன் கதிர்காமர் நிறுவனத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட 04 உத்தியோகத்தர்கள் மற்றும் பண்டாரநாயக்கா சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவனத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட 02 உத்தியோகத்தர்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மொத்தமாக ரூபா 820,711 படிகள் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.	சம்பளத்தில் 1/3 அளவிலான படி செலுத்தப்பட்டுள்ளது என ஏற்றுக்கொள்கிறேன். இத்தீர்மானம் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்டதுடன் இது சம்பந்தமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு குறித்துக் கொள்கிறேன்.	
(ஈ)	2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை	(i)	ஊழியர்கள் சேவை நிலையத்திற்கு வருகை தருதல் மற்றும் வெளிச்செல்லலினை விரல் அடையாளமிடும் இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	விலை மனுக்களைக் கோரி அடையாமிடும் இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்கு குறித்துக் கொள்கிறேன்.	ஊழியர் வருகை மற்றும் வெளயிச் செல்லல் அடையாமிடும் இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.
		(ii)	மேலதிக நேர வேலைப் படிகளைச் செலுத்தும் போது வருகை மற்றும் வெளிச் செல்லலானது விரல் அடையாமிடும் இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும்	நிறுவனத்தில் தொடர்ச்சியாக நடாத்தப்படுகின்ற கருத்தரங்குகள் கலந்துரையாடல் மற்றும் ஏனைய விசேட சந்தர்ப்பங்களுக்கான நடவடிக்கைகளை ஆயத்தம் செய்யும் அனைத்து நடவடிக்கைகளு ம் தற்பொழுது 05 உத்தியோகத்ரத்களின்’ மூலம்	வருகை மற்றும் வெளிச் செல்லல் விரல் அடையாமிடும் இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தியதன் பின்னர் மேலதிக நேர வேலைப் படிகளும் நிடுமுறை தினச் சம்பளங்களும் செலுத்தப்படுதல்

			அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாது மீளாய்வாண்டின் போது மேலதிக நேர வேலைப்படிகள் மற்றும் விடுமுறை தின சம்பளமாக 03 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 750,918 தொகை செலுத்தப்பட்டிருந்தது.	மேற்கொள்ளப்படுவதனால் மேலதிக நேர வேலைப் படிகளும் விடுமுறை தின சம்பளங்களும் கொடுப்பனவு செய்யப்பட்டது.	வேண்டும்.
(உ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய 1/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கையேடு				
	(i)	3.2(i) ஆம் பிரிவு	ஆளணியினரைச் சேர்த்துக் கொள்ளும் நடைமுறைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவான பண்டாரநாயக்கா சர்வதேச பயிற்சிப் பிரிவின் ஆளணியினரைச் சேர்த்துக் கொள்ளும் நடைமுறைகள் மற்றும் சம்பள அளவுத்திட்டத்திற்காகவும்	புதிய ஆளணியினருக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் 2024 ஏப்ரல் 17 ஆந் திகதி கிடைத்துள்ளது. 2025 மே 26 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது இது தொடர்பாக ஒரு பத்திரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் சம்பள அளவுத் திட்டத்திற்காக	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும்.

			முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என தயவாக தெரிவிக்கிறேன்.	
	(ii)	6.6 ஆம் பிரிவு	ஆண்டறிக்கையானது நிதி ஆண்டு முடிவடைந்து ஐந்து மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனம் 2007 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்வைத்திருக்கவில்லை.	2023 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை புதிய பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும். 2024 ஆம் ஆண்டு ஆண்டறிக்கையின் செயற்பாடுகள் மற்றும் செயற்திட்ட நடவடிக்கைகள் தற்பொழுது முடிவடைந்துள்ளது.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய 1/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான நல்லாட்சிக்கான வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பிரிவு	ஒவ்வொரு செயற்பாட்டிற்காகவும் நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணை, நிதி மதிப்பீடு மற்றும் அதற்காக பொறுப்புக்கூற வேண்டிய நபர்கள் என்பவற்றை காட்டி நிறுவனம் தனது குறிக்கோளினை நிறைவேற்றுவதற்காக இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி வருட்ாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2026 ஆம் ஆண்டிலிருந்து காட்டப்பட்டுள்ளவாறு வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தினை சரியான மாதிரிப் படிவத்திற்கு இணங்க தயாரிப்பதற்கு குறித்துக்கொள்கிறேன்.	சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் சரியான மாதிரிப்படிவத்திற்கு இணங்க வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
(எ)	இலங்கை சனநாயக சோசலிசக்	ஆண்டின் போது மேற்கொள்வதற்கு எதிர்பார்த்த பெறுகை	2024 சனவரி 11 ஆந் திகதியின் பின்னர் நிறுவனத்தின்	வழிகாட்டிக் கோவையின் பிரகாரம்	

குடியரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டி	நடவடிக்கைகள் மற்றும் அதன் கிரயத்தை உள்ளடக்கிய ஒரு பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனம் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பணிப்பாளர் சபை கூடியிருக்காததனால் 2024 ஆம் ஆண்டிற்காக ஒரு பெறுகைத்திட்டம் அங்கீகரிக்கப்பட வில்லை. எதிர்காலத்தில் 2025 ஆம் ஆண்டிற்கான ஒரு பெறுகைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2024 ஏப்ரல் 17 ஆந் திகதிய டீஎம்எஸ்/1828 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் நிறுவனத்திற்காக அங்கீகரித்த ஆளணியினர் மற்றும் அதற்குரிய சம்பள அளவுத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கிணங்க ஆளணியினருக்கு சம்பளத்தை செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	புதிய ஆளணியினருக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் 2024 ஏப்ரல் 17 ஆந் திகதி கிடைத்திருந்தும் புதிதாக உருவாக்கப்பட்ட பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை இதுவரை அங்கீகரிக்கப்படாததன் காரணமாக ஆட்சேர்ப்பதற்கு முடியாதுள்ளது. நிறுவனத்தின் மிகுதி ஆளணியினர் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் என்பதனால் புதிய சம்பள அளவுத்திட்டத்திற்கு இணங்க சம்பளத்தை கொடுப்பனவு செய்ய முடியவில்லை. 2024 சனவரி மாதத்தின் பின்னர் செயற்படுகின்ற ஒரு பணிப்பாளர்சபை காணப்படாததுடன் 2025 மே 26 ஆந் திகதி ஒரு பணிப்பாளர் சபை பத்திரம் இது தொடர்பாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.	புதிதாக உருவாக்கப்பட்ட பதவிகளுக்காக ஆட்சேர்பபு நடைமுறையை அங்கீகரித்துக் கொள்வதற்கும் அங்கீகரித்த சம்பள அளவுத்திட்டத்திற்கு இணங்க சம்பளத்தை செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.